ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1523/16 - 2007 නොවැම්බර් 14 වැනි බදාදා - 2007.11.14
*1523/16 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ.-பீ 21/78*

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர் கல்வி அமைச்சர், பேராசிரியர் டபிள்யூ. ஏ. விஸ்வா வர்ணபால ஆகிய நான், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பில் 1986, செத்தெம்பர் 26 ஆந் திகதிய 420/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறானதும், மேற்படி சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது அக்கட்டளையின் (iv) ஆம் (V) ஆம் பந்திகளை அத்தகைய பந்திகளை உடனடுத்துவரும் நிரல் I மற்றும் நிரல் II என்பவற்றில் அடங்கியுள்ள எல்லாப் பதிவுகளுடனும் சேர்த்து நீக்கம் செய்வதன்மூலம் அவற்றிற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :–

“(iv) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பீடங்களை குறித்தொதுக்குகின்றேன்.

(அ) அறிவியல் துறை ;

(ஆ) விவசாயத் துறை ;

(இ) வாணிப, முகாமைத்துவத் துறை ;

(ஈ) கலை மற்றும் கலாசாரத் துறை ;

(உ) சுகாதாரப் பராமரிப்பு மற்றும் அறிவியல் துறை

(v) அத்தகைய பல்கலைக்கழகத்திற்கு பந்தி (iv) என்பதன்கீழ் குறித்தொதுக்கப்பட்டதும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்டதுமான பல்கலைக்கழகத்தின் பீடம் ஒவ்வொன்றும் நிரல் II இல் அத்தகைய பீடம் ஒவ்வொன்றிற்கும் நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டவாறான கற்கைத் துறைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென குறித்துரைக்கின்றேன்.

**அட்டவணை**

| *நிரல் I*<br>*பீடம்* | *நிரல் II*<br>*துறை* |
|---|---|
| **விஞ்ஞான பீடம்** | 1. தாவரவியல் துறை<br>2. இரசாயனவியல் துறை<br>3. கணிதத் துறை<br>4. விலங்கியல் துறை<br>5. பௌதிகவியல் துறை |
| விவசாய பீடம் | 1. விவசாய உயிரியல் துறை<br>2. விவசாய இரசாயனவியல் துறை<br>3. விவசாய இயந்திரவியல் துறை<br>4. பயிர் விஞ்ஞானத் துறை<br>5. விவசாய பொருளியல் துறை<br>6. விலங்கியல் விஞ்ஞானத் துறை |
| வர்த்தக முகாமைத்துவ பீடம் | 1. வர்த்தகத் துறை<br>2. பொருளியல் துறை<br>3. முகாமைத்துவத் துறை |
| கலை, கலாசார பீடம் | 1. அராபிய துறை<br>2. இஸ்லாமிய கற்கைத் துறை<br>3. நுண்கலை துறை<br>4. புவியியல் துறை<br>5. மொழியியல் துறை<br>6. சமூக, விஞ்ஞான துறை<br>7. கல்வியியல், சிறுவர் நலவியற் துறை<br>8. ஒப்பீட்டுச் சமயம், சமூக நல்லுறவுத்துறை |
| சுகாதார பராமரிப்பு பீடம் | 1. மனித உயிரியல் துறை (உடலமைப்பியல், உடற்றொழிலியல், உயிரிரசாயனவியல்)<br>2. நோய் உடற் தொழிலியல் துறை (நோயியல், நுண்ணுயிரணுவியல், ஒட்டுண்ணியியல், சட்ட மருத்துவம்)<br>3. சாய் சாலை விஞ்ஞானத் துறை (மருத்துவம், அறுவை வைத்தியம், தாய் மருத்துவம், மகளிர் மருத்துவம், குழந்தை மருத்துவம், மனநோயியல், ஔடதவியல், உடற் தொழில் நிழலுருசாயல்)<br>4. முதனிலை சுகாதாரப் பராமரிப்பு துறை (சமூக மருத்துவம், குடும்ப மருத்துவம்)<br>5. மருத்துவக் கல்வி ஆராய்ச்சித் துறை<br>6. இணை சுகாதார விஞ்ஞானத் துறை (தாதியியல், மருந்தகம், மருந்தாய்வுகூட தொழில்நுட்பம், ஊடுகதிர் படமெடுப்பு, இயன் மருத்துவம்)." |

பேராசிரியர் டபிள்யு. ஏ. விஸ்வா வர்ணபால,
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2007, நவெம்பர் 6.

*11–983*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.